**சுருக்கம்**

பள்ளிக்கல்வி - தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் மலைப் பகுதிகளில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான மலைச் சுழற்சி மாறுதலின் போது பின்பற்றப்பட வேண்டிய பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை**

அரசாணை (நிலை) எண். 107

நாள் : 17.06.2022
திருவள்ளுவராண்டு 2053,
சுபகிருது வருடம், ஆனி-3

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.404, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள் 25.05.1995.
2. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை, நாள் 17 .12.2021.
3. அரசாணை (நிலை) எண்.12, பள்ளிக் கல்வித் (பக5(1) துறை, நாள் 03.02.2022
4. சென்னை உயர்நீதிமன்றம், வழக்கு எண். 1258, 1264, 1272, 2357, 3573 மற்றும் 11560 / 2022 மற்றும் W.M.P.Nos.1360, 1362, 1364, 1367, 1370, 1371, 1379, 1382, 1384, 2508, 2510, 2513, 2515, 3546, 3547, 3548, 3705, 3707 மற்றும் 10840 / 2022-இல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை நாள் 29.04.2022
5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.756 / டி1 / 2022, நாள். 14.06.2022.

*********

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மலைப்பாங்கான இடங்களில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை பணி மாறுதல் செய்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்

பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களிடையே பொது மாறுதல்கள் வழங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாணையின் பத்தி-8-இல் மலைப்பாங்கான பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிமாறுதல் தொடர்காக வெளியிடப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை திரும்ப பெறப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு மட்டும் தொடரும் என திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தொடக்கக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் மலைப் பகுதிகளில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான மலைச் சுழற்சி மாறுதலின் போது பின்பற்றப்பட வேண்டிய பொதுவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

5. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் மலைப் பகுதிகளில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான மலைச் சுழற்சி மாறுதலின் போது கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது:-

1. மலைச் சுழற்சி மாறுதல்கள் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளியில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் என அனைவருக்கும் பொருந்தும்.

2. மலைச் சுழற்சி முறை மாறுதல் நடைமுறையில் உள்ள ஒன்றியங்களில் பொது மாறுதலுக்கு முன்னதாகவே மலைச் சுழற்சி மாறுதல்கள் (முதல் நாளிலேயே) நடத்தப்பட வேண்டும்.

3. அனைத்து வகை ஆசிரியர்களும் மலைப்பகுதிகளில் பணியாற்ற பெரிதும் தயக்கத்துடன் உள்ளனர் என்பதால் அனைத்து ஆசிரியர்களும் குறைந்தது ஓராண்டு காலம் மலைப் பகுதியில் சுழற்சி முறையில் பணிபுரிய அனுமதிக்கப்பட வேண்டும். அவர்கள் மலைப் பகுதியில் உள்ள அதே பள்ளியிலேயே தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் நேர்வில் எழுத்துப்பூர்வமான கடிதம் பெற்று அதே பள்ளியில் தொடர அனுமதிக்கலாம். அனைத்து வகை ஆசிரியர்களுக்கும் (இடைநிலை / பட்டதாரி / தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர் / நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்) இது பொருந்தும்.

4. மலை இறக்கம் - மலைப் பகுதியில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் எவரேனும் அதே பள்ளியில் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் நிகழ்வில் அந்த ஆசிரியர்களை தொடர்ந்து அதே பணியிடத்தில் பணிபுரிய அனுமதித்து, மற்ற ஆசிரியர்களை அவர்களின்

முன்னுரிமை (ஒன்றியத்தில் பணியில் சேர்ந்த நாள்) அடிப்படையில் சமவெளிப் பகுதிக்கு மாறுதல் அளிக்க வேண்டும். இவ்வாறு மாறுதல் அளிக்கும் போது மலையேற்றத்தால் எற்படும் காலிப் பணியிடங்களையும் ஏற்கனவே சமவெளிப்பகுதியில் உள்ள காலிப்பணியிடங்களை ஒட்டுமொத்த காலிப்பணியிடங்களாக காண்பித்தல் வேண்டும். மாவட்டங்கள் பிரிக்கப்படும் போது, ஒரு ஒன்றியத்தில் உள்ள பள்ளிகள் வேறு ஒன்றியத்தில் இணையும் நிகழ்வில் அதாவது ஒரு சமவெளிப்பகுதி ஒன்றியத்தில் உள்ள பள்ளிகள் மலைச்சுழற்சி ஒன்றியத்தில் இணையும் போது அந்த பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் பழைய ஒன்றியத்தில் சேர்ந்த தேதியே மலைச் சுழற்சிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. மலை ஏற்றம் - மலை இறக்கம் செய்யப்படுவதால் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டிய எண்ணிக்கையை தவிர்த்து நிகர பணியிடங்களுக்கு சமவெளிப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களில் இளையோரிலிருந்து மூத்தோர் என்ற நிலையில் முன்னுரிமை நிர்ணயம் செய்து சுழற்சி முறையில் மலை ஏற்றம் செய்யப்படுவர். ஏற்கனவே உள்ள சுழற்சி முழுமை பெறும் வரை மலையேற்றம் நிகழும்.

6. மலைச் சுழற்சி ஒரு முழுசுற்று நிறைவடைந்த பின்னர் ஒன்றியத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மலைச் சுழற்சி மாறுதல் பதிவேட்டில் (Master list) இருந்து மலைச் சுழற்சிக்கு உட்படுத்தப்படாத அனைத்து வகை ஆசிரியர்களும் அடுத்த சுற்று மாறுதலுக்கு உட்படுத்தப்படுவர்.(குறிப்பாக ஒரு முழுச்சுற்று முடிவடையும் முன்பு நேரடி நியமனம் மூலமாகவோ/ பணிமாறுதல் மூலமாகவோ / பணி நிரவல் காரணமாகவோ இந்த ஒன்றியத்தில் இணையும் அனைவருக்கும்).

7. மலைச் சுழற்சி மாறுதலின் போது ஓராண்டில் ஓய்வு பெற உள்ள ஆசிரியர்களுக்கு அதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

8. மலைச் சுழற்சி மாறுதலில், மலையில் இருந்து இறக்கம் செய்யும் ஆசிரியர்களுக்கு அந்த ஆண்டில் மலை ஏற்றம் செய்வதால் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் மலை சுழற்சி ஒன்றியத்தில் ஏற்கனவே (The Crucial date will be declared by Directorate) காலியாக உள்ள மற்ற காலிப் பணியிடங்கள் அனைத்தும் கலந்தாய்வின் போது அட்டவணைப்படுத்தப்பட்டு ஒன்றிய முன்னுரிமையின் அடிப்படையில் தெரிவு செய்வதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

9. பதவி உயர்வு பணியிடங்களான நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் மற்றும் தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஆகிய பணியிடங்களுக்கான பதவி உயர்வானது மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு வழங்கப்பட வேண்டும். மலைப்பகுதிகளில் காலிப்பணியிடம் இல்லாத பட்சத்தில் மட்டுமே சமவெளி பகுதிகளில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

10. சமவெளிப் பகுதியில் நடப்பாண்டில் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள் இளையோராக கருதப்பட்டு தொடர்ந்து வரும் கல்வியாண்டில் மலைச் சுழற்சிக்கான மலை ஏற்றுப் பட்டியலில் அவர்களின் பெயர் முதலில் இடம்பெற வேண்டும். இது அந்த ஒன்றியத்தில் உள்ள முன்னுரிமையின்படி அமைதல் வேண்டும்.

11. பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பதவி உயர்வு பெற்ற தேதி முன்னுரிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நேரடி நியமன ஆசிரியர்கள் மற்றும் ஒன்றியங்கள் அல்லது பிற மாவட்டங்களில் இருந்து மாறுதலின் மூலம் பணியேற்ற ஆசிரியர்கள் அந்த ஒன்றியத்தில் பணியில் சேர்ந்த நாளை முன்னுரிமைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

12. மலைப் பகுதி அமைந்துள்ள ஒன்றியங்களில், மலைப்பகுதியில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களும் அவர்கள் மலைப்பகுதியில் விரும்பும் காலம் அல்லது துறை அனுமதிக்கும் காலம் வரை பணிபுரிய அனுமதிக்கப்படுவர். (குறைந்தபட்சம் 1 ஆண்டு)

13. மலை சுழற்சி மாறுதலின் போது மலை ஏற்றம் செய்யும் நிகழ்விற்கு மட்டும் கீழ்க்கண்ட ஆசிரியர்களுக்கு விலக்களிக்கப்படுகிறது.

(1). 100% பார்வையற்ற ஆசிரியர்கள்.

(2). 40% மற்றும் அதற்கு மேல் மாற்றுத் திறன் கொண்ட ஆசிரியர்கள் (உரிய தகுதி வாய்ந்த அலுவலர்களால் வழங்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)

(3). மன வளர்ச்சி குன்றிய / மாற்றுத் திறன் கொண்ட தமது குழந்தைகளை பராமரிக்கும் ஆசிரியர்கள் (உரிய தகுதி வாய்ந்த அலுவலர்களால் வழங்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்)

(4). சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இதய அறுவை சிகிச்சை செய்தவர்கள் மற்றும் மூளைகட்டி (Brain tumour) அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள்.

14. மலையேற்றம் ஆணை பெற்ற ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து ஒன்றியம் விட்டு ஒன்றியம், மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் பெற்று இருப்பின் அந்த ஆசிரியர் அடுத்த கலந்தாய்வுக்கு முன்னரே பணிவிடுவிப்பு செய்யப்பட வேண்டும்.

15. பொது மாறுதல் கலந்தாய்வுக்கு முன்னரே மலைச்சுழற்சி கலந்தாய்வில் கலந்து கொண்டு மலைப்பகுதிக்கு ஆணை பெற்ற ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொண்டு ஒன்றியம் விட்டு ஒன்றியம் / மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் ஆணை பெற்றால் (அவ்வாசிரியர்களை பணிவிடுவிப்பு செய்யும் பட்சத்தில் மலைப்பகுதியில்

காலிப்பணியிடம் ஏற்படும் என்பதால்) அந்த ஆசிரியர்களை தொடர்ந்து வரும் அடுத்த கலந்தாய்வுக்கு முன்னர் மட்டுமே பணிவிடுவிப்பு செய்ய வேண்டும்.

6. இந்த வழிகாட்டுதல் நெறிமுறைகளின் அடிப்படையில் தெளிவான நடவடிக்கைகளை வகுத்து கள அலுவலர்களுக்கு அனுப்பும்படி, தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**காகர்லா உஷா,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
**நகல்:-**
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (தொ.க1, 2,3) துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலைத் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.
17.6.22.